**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தாராபுரம்</u>**

**முன்னிலை : திரு.V.ஜான் மினோ., பி.ஏ.,பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**2024–ம் ஆண்டு ஜுன் திங்கள் 10–ம் நாள் திங்கள்கிழமை**

<u>இ.ம.எண். 1/2023</u>

**இன்**

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.85/2022</u>**

1. ராமசாமி
2. உத்தமி
3. வேதநாயகி ...மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள்

// எதிர் //

ராஜாமணி

.... எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

இம்மனு என் முன்னர் 03.06.2024–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

மேல்முறையீட்டு வழக்கின் மீது 06.02.2023–ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41, விதி 21 & 151–ன் படி மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர்கள், மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்கள். எதிர்மனுதாரர் / மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றம்,

29.08.2022 அன்று, அசல் வழக்கு எண்.97/2018–ல் பிறப்பித்த தீர்ப்பை ஆட்சேபித்து இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். 1–ம் மனுதாரர்/1–ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு, கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாததால், மற்ற 2, 3 மனுதாரர்கள்/2,3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் உடனிருந்து கவனித்து வந்ததாலும், 06.02.2023 அன்று நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை. மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களால், வழக்கறிஞரைச் சந்திக்க இயலாமல் போய்விட்டதால், மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக, 06.02.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவை அனுமதிக்காத பட்சத்தில், மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு மிகுந்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டு விடும். மனு அனுமதிக்கப்படவேண்டும்.

**3. எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிருரையில், எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை, மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களே நிரூபிக்க வேண்டும். 06.02.2023 அன்று ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் தெரியவந்ததால், இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையது அல்ல. வழக்கை நடத்தாமல் காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில், மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் செலவு தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், விசாரணை நீதிமன்றம், 29.08.2022 அன்று, அசல் வழக்கு எண்.97/2018–ல் பிறப்பித்த தீர்ப்பை ஆட்சேபித்து

மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். என்றும், 1–ம் மனுதாரர்/1–ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு, கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாததால், மற்ற 2, 3 மனுதாரர்கள்/2,3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் உடனிருந்து கவனித்து வந்ததாலும், 06.02.2023 அன்று நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும், மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களால், வழக்கறிஞரைச் சந்திக்க இயலாமல் போய்விட்டதால், மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக, 06.02.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவை அனுமதிக்காத பட்சத்தில், மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு மிகுந்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், மனுவை அனுமதிக்கவேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**6.** எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில், 06.02.2023 அன்று ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் தெரியவந்ததால், இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல என்றும், வழக்கை நடத்தாமல் காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில், தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், எதிருரையில் விபரம் சொல்லப்பட்டிருந்தாலும், வாதுரையின் போது, எதிர்மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் தரப்பு செலவு தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என இம்மனுவில் மேற்குறிப்பு செய்து எடுத்துரைக்கப்பட்டது.

**7.** மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், 1–ம் மனுதாரர்/1–ம் எதிர்மேல்முறையீட்டாளர், காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, உடல் நிலை சரியில்லாத காரணத்தினால், 06.02.2023 அன்று, இவ்வழக்கில் நீதிமன்றத்திற்கு வர இயலாமல் போய்விட்டதாகவும் மற்றும் எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில், செலவு தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என இம்மனுவில் மேற்குறிப்பு செய்து எடுத்துரைக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இம்மனுவை, எதிர்மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் செலவுத் தொகையுடன் அனுமதிப்பது உகந்தது என்று

இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில், மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள், எதிர்மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்கு, மனுச் செலவுத் தொகையாக ரூ.1,000/–யை (ரூபாய் ஆயிரம் மட்டும்) 14.06.2024–ம் தேதியிலோ, அல்லது அதற்கு முன்னரோ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க 15.06.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு ஜுன் மாதம் 10–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V JOHN MINO

Digitally signed by V JOHN MINO
Date: 2024.06.10 18:05:19 +0530

3 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை.

V JOHN MINO

Digitally signed by V JOHN MINO
Date: 2024.06.10 18:05:30 +0530

3 வது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

Order IN
IA.1/2023 IN
AS.No.85/2022
Date:10.06.2024